# ஆன்மீகத்தில்தான் இந்தியாவின் வலிமை




▸ டெல்லியில் நேற்று யோகேந்திர சத்சங்கத்தின் நூற்றாண்டு விழாவில், நினைவு தபால் தலையை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார்.

புதுடெல்லி, மார்ச் 8: "இந்தியாவின் ஆன்மீகத்தில்தான் அதன் வலிமை உள்ளது. ஆனால் துரதிருஷ்டவசமாக சிலர் அதனை மதத்துடன் இணைக்கின்றனர்" என்று பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

டெல்லியில் இந்திய யோகேந்திர சத்சங்க சொசைட்டியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் நடைபெற்றது.

கடந்த 1917ம் பரமஹம்சரால் இந்த அமைப்பு தொடங்கப்பட்டது. நேற்று நடந்த நூற்றாண்டு இந்த விழாவில் பிரதமர் நரேந்திரமோடி கலந்து கொண்டார். விழாவில் பிரதமர்

## பிரதமர் பேச்சு

நரேந்திரமோடி பேசியதாவது:

மக்கள் தொகை, உள்நாட்டு மொத்த உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவை இந்த உலகம் ஒப்பிட்டு பார்க்கின்றது.

இந்தியாவின் ஆன்மீகமே அதன் வலிமை ஆகும். ஆனால் சிலர் அதனை மதத்துடன் இணைத்து பேசுவது துரதிருஷ்டவசமானது.

ஆன்மீகம் மற்றும் மதம் இரண்டுமே வெவ்வேறாகும். நாட்டின் ஆன்மீகம் முனிவர்களாலும், துறவிகளாலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. ஒருவரது ஆன்மீக பயணத்திற்கான நுழைவு வாயில் யோகாவாகும்.

ஆன்மீக உலகத்தில் நுழைவதற்கான எளிமையான நுழைவு வாயில் யோகா மட்டுமே. பரமஹம்சரின் போதனைகள் முழுவதும் மனித தன்மை மற்றும் இரக்கத்தால் நிறைந்திருந்தன.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

விழாவில், நூற்றாண்டு நினைவு தபால் தலைகளை பிரதமர் மோடி வெளியிட்டார்.